# சென்ட்ரல் மெட்ரோவில் பரிசளிப்பு விழா

**சென்னை, பிப். 10–**

ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ – மாணவியருக்கு பரிசளிப்பு விழா, சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில், நேற்று நடந்தது.

மெட்ரோ ரயில் நிறுவனம், சென்னை கலைப் பள்ளியுடன் இணைந்து, கடந்த, 2ம் தேதி, பள்ளி, கல்லூரி மாணவ – மாணவியருக்கு ஓவியப் போட்டி நடத்தின.

சென்னை சென்ட்ரல், எழும்பூர், கோயம்பேடு, வடபழனி, ஆயிரம் விளக்கு, அரசினர் தோட்டம், மண்ணடி, வண்ணாரப்பேட்டை உட்பட, 15 மெட்ரோ நிலையங்களில் நடத்தப்பட்ட போட்டியில், 1,100 மாணவ – மாணவியர் பங்கேற்றனர்.

இதில், ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு வரையும்; நான்கு முதல் ஆறாம் வகுப்பு வரையும்; ஏழு முதல், ஒன்பதாம் வகுப்பு வரையும்; 10 முதல், பிளஸ் 2 வரையும், தனித் தனி பிரிவாக போட்டிகள் நடந்தன.

கல்லூரி மாணவ – மாணவியருக்கு, தனியாக போட்டி நடத்தப்பட்டது.

போட்டியில் வெற்றி பெற்ற மாணவ – மாணவியருக்கு, பரிசளிப்பு விழா, சென்ட்ரல் மெட்ரோ நிலையத்தில் நேற்று நடந்தது. இதில், சென்னை மெட்ரோ நிறுவன நிதி பிரிவு பொது மேலாளர் முரளி தலைமை வகித்து, போட்டியில், வெற்றி பெற்ற மாணவ – மாணவியருக்கு, நற்சான்றிதழ், பரிசுகள் வழங்கி பாராட்டினார்.




மெட்ரோ ரயில் நிலையத்தில் நடந்த ஓவியப் போட்டியில், வெற்றி பெற்ற மாணவ – மாணவியருக்கு, மெட்ரோ நிறுவன நிதி பிரிவு பொது மேலாளர் முரளி, நேற்று சான்றிதழ் வழங்கினார். உடன், மக்கள் தொடர்பு துறை துணை மேலாளர் சுருதி.